2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சேலம் மாவட்டம் பரமத்தி வேலூர் பக்கம் உள்ள பாண்டமங்கலத்தைச் சேர்ந்த திருமணக் கோஷ்டியினர் வந்த படகு கவிழ்ந்து 15 பேர் உயிர் இழந்தது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் திரு. சோ. ஆறுமுகம் அவர்கள் சேலம் மாவட்டம் பரமத்தி வேலூர் பக்கம் உள்ள பாண்டமங்கலத்தைச் சேர்ந்த திருமணக் கோஷ்டியினர் வந்த படகு கவிழ்ந்து 15 பேர்கள் உயிர் இழந்ததைப் பற்றி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அது எவவாறு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ் வருகிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 8-3-1981 அன்று பாண்டமங்கலத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் பாசறையைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் திருமணம் கொடுமுடியிலே நடைபெற்று அவர்கள் திருமணம் முடிந்து மணமகனுடைய வீட்டிற்குத் திரும்பி வருகிறபோது, சோழசிறுமணி என்ற படகுத் துறையில் ஒரு நாட்டுப்படகிலே ஏறியிருக்கிறார்கள். சாதாரணமாக அந்தப் படகு ஆற்றைக் கடந்து செல்வதற்கு மாலை ஏழு மணிக்குமேல் செல்லக்கூடாது என்று விதிமுறை இருக்கிறது. அப்படி வகுக்கப்பட்டு இருந்தும், அதை மீறியும் அந்தப் படகிலே 15 பேர்களுக்குமேல் செல்லக்கூடாது என்று இருந்தும், அதிலே 32 பேர்களை ஏற்றிக் கொண்டும் வந்த காரணத்தினாலேயே, 15 பேர்களுக்கு மேல் இறந்திருக்கிறார்கள். இதிலே பெரும்பான்மையாக பெண்கள், சிறுவர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அந்தபடகுப் போக்கு வரத்தை நடத்தக்கூடிய உரிமையாளர் திரு. சின்னசாமி என்பவர் அதைக் காண்ட்ராக்ட்-க்கு விட்டிருக்கிறார்கள். அந்த காண்ட்ராக்ட் எடுத்தவர் திரு. ராமசாமி என்பவர். அவர் ஆரம்பப் பள்ளியிலே படிக்கக்கூடிய ஒரு மாணவனை, திரு. தமிழ்செல்வன் என்ற ஒரு மாணவனை விட்டுப் படகை ஓட்டியிருக்கின்றார். அது விதிமுறைக்குப் புறம்பான ஒன்று. அப்படி அனுமதித்ததன் காரணமாகத்தான இப்பட்டிப்பட்ட ஒரு கோர சம்பவம் நடந்திருக்கிறது. நம்முடைய நெஞ்சத்தை உலுக்குகின்ற வகையிலே இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இதைப்பற்றி விசாரித்து எதிர்காலத்தில் இப்படிப்பட்ட ஒரு சோக சம்பவம் நிகழாத வகையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அவையினுடைய இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு என்னுடைய இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் பரமத்தி-வேலூர் பக்கம் உள்ள பாண்ட மங்கலத்தைச் சேர்ந்த திருமணக் கோஷ்டியினர் வந்த படகு கவிழ்ந்து 15 பேர் உயிர் இழந்தது குறித்து

(திரு. சோ. ஆறுமுகம்) [1981 மார்ச் 10

ஏனென்று சொன்னால், வாணியம்பாடியிலேகூட ரெயில் விபத்து நடைபெற்றது. அதைக் கருத்திலே கொண்டு இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறோம். அதைவிட நெஞ்சத்தை உலுக்குகின்ற வகையிலே, இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கின்ற காரணத்தினாலே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமெனறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 8-3-1981 அன்று கொடுமுடி மகுடேஸ்வரர் கோயிலில் திரு. சந்திர சேகரன் என்பவருக்கும் சுசிலா என்கிற சுலோசனா என்கிறவருக்கும் திருமணம் நடைபெற்று, திருமணக் கோஷ்டி, பெரியார் மாவட்டம் பாசூரிலுள்ள பெண் வீட்டிற்குச் சென்றனர். அன்று பிற்பகல் பாண்டமங்கத்திலுள்ள மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்றனர். பிறகு அவர்கள் காவேரி ஆற்றைக் கடந்து படகில் செல்லுவதற்காகச் சோழசிராமணி என்ற இடத்திற்குச் சென்றனர். அங்கு படகில் 32 பேர் ஏறினர். படகு ஓட்டுநருடன் மொத்தம் 33 பேர் காவேரி ஆற்றைக் கடக்க சிறிது தூரம் ஆற்றில் சென்றனர். சிறிதுதூரம் சென்றதும் படகு கவிழ்ந்தது. இவர்களில் 18 பேர் உயிர் தப்பிச் சென்றனர். மீதியுள்ள 15 பேர்களில் 8 பெண்கள், ஒரு ஆண், 4 குழந்தைகள் ஆகியோரின் இறந்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2 குழந்தைகளின் சடலங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. இது சம்பந்தமாக, சேலம் மாவட்டம் ஜேடர் பாளையம் காவல்நிலையத்தில் (33/81 என்.எஸ். 394-எ.ஐ.பி.சி.) 3 பேர்களின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையிலுள்ளது. படகு ஓட்டிச் சென்ற தமிழ்ச் செல்வன் என்ற 12 வயது பையனும் கட்டணம் வசூலித்த சின்னச்சாமியும் படகு ஒப்பந்தக்காரர் திரு. இராமசாமிக் கவுண்டர் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. இறந்தவர்களின் குடும்பத்திற்குத் தலா ரூ. 1,000 முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர், கபிலர் மலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலப்பன் அவர்களும் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று, சவ அடக்கத்திற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்து, வேண்டிய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஏற்கனவே இந்தச் செய்தியை கேள்விப்பட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தங்களுடைய அதிர்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். இறந்தவர்களின் குடும்பத்திற்கு அரசின் சார்பில் அவர்களிடை

அனுதாபத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். நாமும் நம்முடைய அனுதாபத்தையும் அஞ்சலியையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். தக்க நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கின்றதாலும், சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குப் போடப்பட்டு அது புலன் விசாரணையில் இருப்பதாலும், அது குறித்து மேலும் இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

(முற்பகல் 11-20)

3. அறிவிப்புகள்.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவினை பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, மேலவையின் இசைவிற்காக பேரவைத் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகள் பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன:

1. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1981).

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1981).